வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவணகுமார்

தேதி-3.9.2024 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2 நாடுகளுக்கான 3 நாள் பயணத்தின் முதல் கட்டமாக, இன்று பிற்பகல், புரூனே சென்று சேர்ந்துள்ளார்.

தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் இதுவரை 52 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டு, புதிய மைல்கல் எட்டப்பட்டுள்ளது,

நாட்டில் மக்கள் பலருக்கு, ரத்த கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய் இருப்பது தெரியாமல் உள்ளதால், இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் பத்ம விருது வேண்டி விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களைப் பரிந்துரை செய்வதற்கான உயர்நிலைக் குழுக் கூட்டம், முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் இன்று நடைபெற்றது.

மோடி-பயணம்

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2 நாடுகளுக்கான 3 நாள் பயணத்தின் முதல் கட்டமாக இன்று பிற்பகல் புரூனே சென்று சேர்ந்துள்ளார். புரூனே

தலைநகர் பந்தர் சேரி பெகவானில் வந்திறங்கிய அவரை அந்நாட்டின் பட்டத்து இளவரசர் ஹாஜி அல்-முத்தாதி பில்லா நேரில் வரவேற்றார். புரூனே சர்வதேச விமான நிலையத்தில் பிரதமருக்கு சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது. புருனேயில், சுல்தான் ஹாஜி ஹசன்னால் போல்கியா, மற்றும், அரச குடும்பத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களை, பிரதமர் திரு நரேந்திர மோடி சந்திக்கிறார். இந்தியாவிற்கும் புருனே நாட்டிற்கும் இடையில், தூதரக உறவுகள் நிறுவப்பட்டதன் 40-ஆவது ஆண்டை ஒட்டி, இப்பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய பிரதமர் ஒருவர் புருனே செல்வது இதுவே முதல் முறையாகும்..

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வெளிநாட்டு பயணத்தின் 2-ஆம் கட்டமாக நாளை சிங்கப்பூர் செல்கிறார். சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முக ரத்னம், அந்நாட்டு பிரதமர் திரு லாரன்ஸ் வோங், மூத்த அமைச்சர் திரு லீ சியேன் லூங் ஆகியோரையும் சிங்கப்பர் வர்த்தக பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கிறார். குறிப்பாக உற்பத்தி டிஜிட்டல் மயம், நீடித்த வளர்ச்சி உள்ளிட்டத் துறைகளில் கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள இந்த சந்திப்புகளின் போது முக்கியத் துவம் அளிக்கப்படும். புரூனே மற்றும் சிங்கப்பூர் பயணத்தினால், இருநாடுகள் மட்டுமின்றி, ஒட்டு மொத்த ஆசியான் பிராந்தியத்துடனான இந்தியாவின் உறவுகள் வலுப்பெறும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னதாக புறப்பாட்டுச்

செய்தியில் கூறினார். கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கையிலும், இந்தோ-பசிபிக் பிராந்தியம் பற்றிய இந்தியாவின் தொலைநோக்கு பார்வையிலும், புருனே, சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளுக்கும் முக்கிய இடம் இருப்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டி உள்ளார்.

*ஒரு மரம்-இயக்கம்*

தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் இதுவரை 52 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டு, புதிய மைல்கல் எட்டப்பட்டுள்ளதாக, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். உலக சுற்றுச்சூழல் தினத்தன்று பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த இயக்கத்தை தொடக்கி வைத்து, ஒவ்வொருவரும் தனது தாயின் பெயரில் தலா ஒரு மரக் கன்றை நட வேண்டுமென அழைப்பு விடுத்தார்.

*தொழிலாளர்*

பிரதமரின் வீட்டு வசதி திட்டப் பலன்களை ஏழை தொழிலாளர்களுக்கு நீட்டிக்க, மத்திய தொழிலாளர் துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அனைத்து புலம் பெயர் தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவரையும் இதில் சேர்த்துக் கொள்ள வலியுறுத்தி,

அமைச்சகம், அனைத்து மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதி உள்ளது. தகுதி உள்ள பயனாளிகளுக்கு கூடுதலாக 2 கோடி வீடுகளை கட்டித் தரும் நோக்கத்துடன், பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தை, வரும் 2028-29 ஆம் ஆண்டு வரை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்திருப்பதைக் கருத்தில் கொண்டு அமைச்சகம் இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளது. பொருளாதார ரீதியில் பின் தங்கி உள்ள தொழிலாளர்களை பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கொண்டு வருவதால் இவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி, சமூக நீதியை நிலைநாட்ட உதவிகரமாக இருக்கும் என்று அமைச்சகம் கூறி உள்ளது.

முர்மு

அனைத்து கல்வி நிலையங்களும், பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்த வேண்டும் என குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புனேயில் உள்ள சிம்பயாசிஸ் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர் பெண்கள், நாட்டின் வளர்ச்சியில் ஒருங்கிணைந்த பகுதி என்பதால் பெண்களின் பாதுகாப்பு மிக அவசியம் என்றார். ஆண்-பெண் சமத்துவத்தை பராமரிப்பதில் சிம்பயாசிஸ் பல்கலைக் கழகம் முக்கிய கவனம் செலுத்தி வருவதை குடியரசு தலைவர் பாராட்டினார். நாட்டின் கலாச்சாரத்தையும் சமூகத்தின் தேவைகளையும் மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில்,

நற்பண்புகளின் அடிப்படையிலான கல்வியை, கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். உயர் கல்வி பயிலும் மாணவர்கள் தங்களின் அறிவு மற்றும் திறமைகளை மனித குலத்தின் ஒட்டுமொத்த நன்மைக்கு பயன்படுத்த வேண்டும் என்றும், நலிவடைந்த பிரிவினரின் தேவைகளை கருத்தில் கொண்டு, ஆரோக்கியத்திற்கான புதிய பொருட்களை உருவாக்க வேண்டுமென்றும், சிம்பயாசிஸ் பல்கலைக் கழகத்தில் பயிலும், 85 வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், தத்தம் நாடுகளின் கொடிகளை, இவ்விழாவின் போது குடியரசுத் தலைவரிடம் வழங்குவர்.

முருகன்

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று புதுடெல்லியில், குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கரை சந்தித்து, தமிழ்ச் செம்மொழியின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்துப் பேசினார். டெல்லி பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கான ஆராய்ச்சி மையத்தையும், புதிய துறை ஒன்றையும் உருவாக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். தமிழ் போன்ற பழமையான செம்மொழிகளை, நாடு முழுவதிலும் மாணவர்களுக்கு கற்பிக்கும் வகையில், இதர கல்லூரிகள் மற்றும் துறைகளிலும் புதிய இருக்கைகளை அமைக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

டெல்லி தமிழ் சங்கத்தின் பிரதிநிதிகளும் இந்த சந்திப்பின் போது உடன் இருந்தனர்.

*கைலாஷ்நாதன்*

நாட்டில் அதிகமான ஏழை-எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு ரத்த கொதிப்பு, சர்க்கரை நோய் இருப்பது தெரியாமல் உள்ளதால் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார். தவளக்குப்பம் அரவிந்தர் கண் மருத்துவமனையின் கண் வங்கி சார்பில் இன்று நடைபெற்ற கண் தான இருவார விழாவில் அவர் பேசுகையில், உறுப்பு தானத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன வசதிகள் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வை அதிகரித்தல் அவசியம் என்றார். பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம், ஏழை-எளிய மக்களுக்கு, சுகாதார உத்தரவாதம் அளித்திருப்பதாகவும், கண் மற்றும் மூட்டு அறுவை சிகிச்சைகளால் பலர் பயன் பெற்றுள்ளதாகவும் துணை நிலை ஆளுநர் தெரிவித்தார். கண் தானத்தை ஊக்குவிப்பதில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு விழாவின் போது விருதுகளை அவர் வழங்கிச் சிறப்பித்தார். பின்னர் துணை நிலை ஆளுநர் செய்தியாளர்களிடம் பேசுகையில் நாட்டில் பார்வை இழப்பினால் பாதிக்கப்பட்டுள்ள, லட்ச கணக்கிலான மக்களுக்கு உதவும் வகையிலான கண் சிகிச்சை முகாம்களை அதிக அளவில் நடத்துதல் அவசியம் என்றார்.

*புதுச்சேரி-விருது*

புதுச்சேரியில் பத்ம விருது வேண்டி விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வதற்கான மாநில அரசின் உயர்நிலைக் குழுக் கூட்டம், வணிகவரித் துறை வளாகத்தில் இன்று நடைபெற்றது. முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான், செய்தி-விளம்பரத் துறை செயலர் திரு கேசவன், துறையின் இயக்குநர் திரு கலியபெருமாள், மற்றும், உயர்நிலைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

*நல்லாசிரியர்-விருது (12)*

புதுச்சேரியில் இவ்வாண்டு மாநில நல்லாசிரியர் விருது பெறுவோர் பட்டியலை அரசு இன்று வெளியிட்டுள்ளது. மொத்தம் 21 பெயர்கள் அடங்கிய இப்பட்டியலின் படி, ஆரம்பக் கல்வி நிலையில் டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன் விருது பெற புதுச்சேரியை சேர்ந்த திருமதி உமாதேவி, காரைக்காலைச் சேர்ந்த திரு கில்பர்ட் கிறிட்டியன் ஆகிய 2 ஆசிரியர்களும், இடைநிலைக் கல்வி நிலையில் டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன் விருது பெற,

புதுச்சேரியை சேர்ந்த டாக்டர் விஜயன், திரு சார்லஸ் பால் ஆகிய 2 ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மொழிக் கல்வி ஆசிரியர், தொழிற் கல்வி ஆசிரியர், மற்றும் பெண் ஆசிரியர்களுக்கான முதலமைச்சரின் சிறப்பு விருது பெறும் ஆசிரியர்கள், மற்றும், பிராந்திய வாரியான கல்வி அமைச்சரின் சிறப்பு விருது பெறும் ஆசிரியர்களின் பெயர்களும் அறிவிக்கப் பட்டுள்ளன.

*வேலை வாய்ப்பு*

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவிகளின் மதிப்பெண் சான்றிதழ் விவரங்களை பள்ளி கல்வி இயக்குனரகத்தில் இருந்து பெற்று தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன் மொபைல் செயலி மூலம் பதிவு செய்ய தொழிலாளர் துறை வேலை வாய்ப்பு அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது. மாணவ-மாணவிகள், வேலை வாய்ப்பு பதிவிற்காக, வேலை வாய்ப்பு அலுவலகத்தை நேரில் அணுக வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

*புதுச்சேரி-பேனர்*

புதுச்சேரியில் அனுமதியின்றி பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள பேனர்கள், கொடிகள் மற்றும் கட்-அவுட்டுகளை அகற்றுவது குறித்து மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று அதிகாரிகளுடன்

ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். மழைக்காலம் விரைவில் தொடங்க உள்ளதால் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் வகையில், காவல், உள்ளாட்சி, பொதுப் பணி மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து, அனுமதி இல்லாத கட்-அவுட்டுகள் மற்றும் பேனர்களை அகற்றவும், அனுமதி இன்றி கட்-அவுட் மற்றும் பேனர் வைப்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை எடுக்கவும் அவர் வலியுறுத்தினார். காவல்துறை கண்காணிப்பாளர் செல்வி லட்சுமி சவ்ஜன்யா, மாவட்ட துணை ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன், உள்ளாட்சித் துறை துணை இயக்குநர் திரு சவுந்தர்ராஜன், நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*மழை*

ஆந்திரா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதாகவும், மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்க கடலில், வரும் 5-ஆம் தேதி வாக்கில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும், நாளையும் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மிதமான மழை

எதிர்பார்க்கப்படுகிறது. வரும் 9-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, இன்று குஜராத்தில் அதி கன மழைக்கும், மேற்கு மத்திய பிரதேசத்தில் மிக கன மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. வடகிழக்கு மாநிலங்கள், மேற்கு உத்தரபிரதேசம், கேரளா மற்றும் மாகே பகுதியில் நாளை வரை மிக கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வளர்ச்சி-விகிதம்

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி பற்றிய உலக வங்கியின் கணிப்பு, 6.6 சதவிகிதத்தில் இருந்து, 7 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தனியார் முதலீடுகள் மற்றும் நுகர்வு உள்ளிட்ட முக்கிய காரணிகளால், நடுத்தரக் காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வலுவாகவே நிடிக்கும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7 சதவிகிதம் அதிகரிக்கும் என, சர்வதேச செலாவணி நிதியத்தின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி நடப்பு நிதியாண்டின் முதல் 3 மாதங்களில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.7 சதவிகிதமாக மதிப்பிடப் பட்டுள்ளதும், பொது தேர்தலுக்கான மாதிரி

நடத்தை நெறிமுறைகளின் அமலாக்கத்தினால் அரசுச் செலவினங்கள் குறைந்திருந்ததே இதற்கு முக்கிய காரணம் என்பதும் குறிப்பிடத் தக்கது.

கட்கரி

சாலைகளில் மக்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது என்று மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறி உள்ளார். சுரங்கப் பாதைகளின் கட்டுமானம் குறித்து, ஃபிக்கி தொழில்-வர்த்தக கூட்டமைப்பின் சார்பில் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் அவர் பேசுகையில், மழை-வெள்ளம் மற்றும் மண்சரிவில் இருந்து சாலைகளைப் பாதுகாக்க, குறைந்த செலவிலான நிரந்தரத் தீர்வுகள் தேவை என்றார். இந்தியாவை 5 டிரில்லியன் பொருளாதாரமாக மேம்படுத்த அரசு பாடுபட்டு வருவதாக அமைச்சர் கூறினார். இம்முயற்சிகள் வெற்றி பெற, போதிய கச்சாப் பொருட்கள், மற்றும், நம்பகமான தொழில் நுட்பங்களும், உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளும் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். எல்லைப் புற சாலைகள் அமைப்பின் தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜென்ரல் ரகு ஸ்ரீனிவாசன் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் இந்தியாவில் போக்குவரத்து தேவைகளுக்கான சுரங்கப் பாதைகளை அமைக்க, எல்லையற்ற வாய்ப்புகள் உள்ளதாக கூறினார். கடினமான புவியியல் பகுதிகளை எளிதில் அணுகுவது உட்பட, சுரங்கப்

பாதைகளால் பல அனுகூலங்கள் இருப்பதால், நாட்டில் சுரங்கப் பாதைகளை அமைப்பதற்கான திறன்களை மேம்படுத்துதல் அவசியம் என்று அவர் கூறினார். சுரங்கப் பாதை திட்டங்களுக்கான வாய்ப்புக்கள், மற்றும் சவால்கள் பற்றிய ஃபிக்கி-கிரைசில் ஆய்வறிக்கையும் மத்திய அமைச்சரால் இந்நிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்டது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2 நாடுகளுக்கான 3 நாள் பயணத்தின் முதல் கட்டமாக, இன்று பிற்பகல், புரூனே சென்று சேர்ந்துள்ளார்.

தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் இதுவரை 52 கோடி மரக் கன்றுகள் நடப்பட்டு, புதிய மைல்கல் எட்டப்பட்டுள்ளது,

நாட்டில் மக்கள் பலருக்கு, ரத்த கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய் இருப்பது தெரியாமல் உள்ளதால், இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் பத்ம விருது வேண்டி விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களைப் பரிந்துரை செய்வதற்கான உயர்நிலைக் குழுக் கூட்டம், முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் இன்று நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 3.9.2024/Script/

------------------------